**DEPOSITION OF WITNESSES**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI**

**S.C. No:66/2024**

**Deposition of Witnesses for PW 5**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.ஜவஹர் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Section 142 of Bharatiya Sakshya Adhiniyam, 2023, on the day of 12.11.2025

**1ம் எதிரி ஆஜர் ,2ம் எதிரி இறந்துவிட்டார். இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது புதுக்கோட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.09.2011 ம் தேதி அறந்தாங்கி சட்ட ஒழுங்கு காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது புதுக்கோட்டை தலைமை அரசு மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலின் படி மருத்துவமனைக்கு வந்து அங்கு சிகிச்சையில் இருந்த யோகேஸ்வரன் என்பவரிடம் வாக்குமூலம் பெற்று அதன் அடிப்படையில் அறந்தாங்கி காவல் நிலைய குற்ற எண் 555/2011 u/s 324,506(II) IPC ன்படி வழக்கு பதிவு செய்து வாதி புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கை அசல் ஆகியவற்றை நீதித்துறை நடுவர் அனுப்பியும் மற்ற நகல்களை சம்மந்தபட்ட அலுவலகத்திற்கு அனுப்பியும் ஒரு நகலை வழக்கு கோப்பில் வைத்து வழக்கின் மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் அவர்களிடம் ஒப்படைத்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை

**அ.த.சா.ஆ 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்க விபரம் சொன்னேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

புகார் வாக்குமூலத்தில் கண்ட கண்ணன் என்பவர் காயம் பட்டது சம்மந்தமாக கொடுக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் அறந்தாங்கி காவல்நிலைய குற்ற எண் 554/2011 ல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது நான் தான் என்றால் சரிதான். அந்த முதல் தகவல் அறிக்கையில் மனோகரன் மற்றும் யோகஸ்வரன் ஆகியோர் மீது பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். 12.09.2011 ம் தேதி இரவு 10.30 மணிக்கு சம்பவம் நடந்ததாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கு சம்மந்தமாக 13.09.2011 ம் தேதி காலை 5.00 மணிக்கு காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். குற்ற எண் 555/2011 வழக்கின் மருத்துவமனையில் 13.09.2011 ம் தேதி காலை சுமார் 9.00 மணிக்கு தகவல் கிடைக்கப்பட்டு தகவலின் அடிப்படையில் காலை 10.00 மணிக்கு மருத்துவமணைக்கு சென்றேன். இரண்டு வழக்கு சம்மந்தமான சம்பவம் ஒரே இடத்தில் நடந்தாக தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் காலத்தில் காவல் நிலையத்தில் இருந்து நேர் பின்பக்கமே கட்டிடமே நீதிமன்றம் ஆகும். காவல் நிலையத்திற்கும் நீதிமன்றத்திற்கும் சுமார் 10 மீட்டர் என்றால் சரிதான். குற்ற எண் 555/2011 எத்தனை மணிக்கு புகார் பதிவு செய்யப்பட்டது என்றால் 13.09.2011 ம் தேதி மதியம் 12.00 மணிக்கு புகார் பதிவு செய்யப்பட்டது.நீதிமன்றத்தில் குற்ற எண் 555/2011 முதல் தகவல் அறிக்கை 13.09.2011 ம் தேதி இரவு 8.40 மணிக்கு சென்றடைந்துள்ளது என்றால் சரிதான். மேற்படி காலதாமதம் தொடர்பாக ஏதேனும் காரணம் உள்ளதா என்றால் இல்லை. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் புகார் கொடுக்கவில்லை என்றும் மருத்துவமணையில் இருந்து எந்த தகவலும் வரவில்லை என்றும் குற்ற எண் 554/2011 ன் முதல் தகவல் அறிக்கையின் அடிப்படையான வழக்கினை செயலிழக்க செய்யவேண்டும் என்ற அடிப்படையில் பின் யோசனையுடன் முன் நேரம் இட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான்

சொல்லும் புகார் வாக்குமூலம் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை

Taken down by me in open court
read over to the witness and
admitted by him/her to be correct.

Addl. District Judge/ Presiding Officer,
Spl. Court for EC/NDPS Act case,
Pudukkottai